# யாதவர் கல்லூரி (தன்னாட்சி)

## தமிழ்த்துறை - சுயநிதிப்பிரிவு

## மதுரை - 625 014.

சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறை 1996 ஆம் ஆண்டு முதல் பகுதி – 1 தமிழ் பயிற்றுவிக்கும் துறையாகத் திறம்படச் செயல்பட்டு வருகின்றது. நுண்ணுயிரியல் துறை, உயிர்வேதியியல் துறை, கணினி அறிவியல் துறை, தகவல் தொழில் நுட்பத் துறை, கணினிப் பயன்பாட்டியல் துறை, ஆங்கிலத்துறை, கணிதத்துறை மாணவர்களுக்குப் பகுதி – 1 தமிழ் பயிற்றுவிக்கும் துறையாகவும் வணிகவியல் துறை, நிர்வாகவியல் துறை மாணவர்களுக்கு சிறப்புத்தமிழ் பயிற்றுவிக்கும் துறையாகவும் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் பி.ஏ தமிழ் இலக்கியம் (B.A Tamil) தொடங்கப்பட்டு தமிழ் இலக்கியம் பயிற்றுவிக்கும் துறையாகவும் செயல்பட்டு வருகின்றது.

**சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையில் பணியாற்றி அரசுப் பணிக்குச் சென்ற பேராசியர்கள் குறித்த விவரங்கள்**

| வ.எண் | பெயர் | கல்வித்தகுதி | பணியில் சேர்ந்த நாள் | பணியிலிருந்து விலகிய நாள் |
|---|---|---|---|---|
| 1 | முனைவர் இரா.பேபிகிருஷ்ணம்மாள் | எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பி.எச்.டி., | 30.06.1996 | 19.07.2000 |
| 2 | முனைவர் நா.நாகலிங்கம் | எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி., | 10.08.1998 | 26.12.2007 |
| 3 | முனைவர் ஆ.த.பரந்தாமன் | எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி., | 10.08.1998 | 02.10.2007 |
| 4 | முனைவர் ச.இராமமூர்த்தி | எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி., | 10.08.1998 | 26.12.2007 |
| 5 | முனைவர் சோ.இரா.மல்லிகா | எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி., | 04.07.2002 | 28.07.2008 |
| 6 | முனைவர் இரா.நித்யா | எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி., | 21.06.2006 | 30.08.2015 |
| 7 | பேரா.க. ரேணுகாதேவி | எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., | 01.07.2009 | 25.04.2018 |

**சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையில் பணியாற்றி வரும் பேராசியர்கள்**

| **வ.எண்** | **பெயர்** | **கல்வித்தகுதி** | **பணியில் சேர்ந்த நாள்** |
|---|---|---|---|
| 1 | முனைவர் கு.சுப்பிரமணியன் | எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எச்.டி., | 04.07.2002 |
| 2 | முனைவர் ஜா.சத்யபாமா | எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எச்.டி., | 21.06.2006 |
| 3 | முனைவர் கா.வீரபாண்டியன் | எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எச்.டி., | 01.08.2008 |
| 4 | முனைவர் கா.பாஸ்கரன் | எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எச்.டி., | 02.07.2009 |
| 5 | முனைவர் சி.அற்புதராணி | எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எச்.டி., டி.எஸ்.எஸ்., | 07.07.2010 |
| 6 | பேரா.செ.இராமநாதகோபாலன் | எம்.ஏ., எம்.ஃ.பில்., | 24.08.2017 |
| 7 | பேரா.கு.சந்தனமாரி | எம்.ஏ., பி.எட்., | 06.09.2018 |

கல்லூரியின் பல்வேறு பொறுப்புகளில் இப்பேராசிரியர்கள் அனைவரும் இடம் பெற்றுத் திறம்படச் செயலாற்றி வருகின்றார்கள்.

**பேராசிரியர்களின் ஆய்வுப் பணிகள்**

தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவில் ஐந்து பேராசிரியர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ள நிலையில் தற்போது ஒரு பேராசிரியர் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகின்றார்.

பேரா.கு.சந்தனமாரி - தமிழ் இலக்கியங்களில ஆயர்கள் - மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 2018.

**நூலகம்**

துறைக்கெனத் தனியான நூலகம் 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. 375 நூல்களைக் கொண்டு அனைத்துத்துறை மாணவர்களுக்கும் பயன் அளிக்கக் கூடியதாகத் துறை நூலகம் இயங்கி வருகின்றது.

**திறமைகளின் களம்**

போட்டிகள் நிறைந்த உலகில் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை தரும் வகையில் கருத்தரங்கம், கவிஞர்களை உருவாக்கும் முயற்சியின் விதையாகக் கவியரங்கம் , மாணவர்களே பங்கேற்று நிகழ்த்தும் பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கலந்துரையாடல் போன்ற நிகழ்வுகளின் வழி மாணவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் களமாகத் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு செயல்பட்டு வருகின்றது. கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமின்றிப் பள்ளி மாணவர்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் தன் சேவையைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

யாதவர் கல்லூரியைச் சேர்ந்த அனைத்துத்துறை மாணவர்களது திறமையை அரங்கேற்றும் விதமாக **'சிறகுகள்'** எனும் அனைத்துத்துறை மாணவர்களுக்கு இடையேயான கலை அறிவுத்திறன் போட்டி வருடந்தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அதிகப் புள்ளிகள் பெறும் துறைக்குச் சுழற்கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

துறைப்பேராசிரியர்கள் வெளிக் கல்லூரிகளுக்குச் சென்று பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தி வருகின்றனர். கல்லூரியிலும் பல்வேறு பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றி வருகின்றனர். பேராசிரியர்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டுடன், மாணவர்களைத் திறம்பட உருவாக்கும் களமாகத் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு சிறப்போடு இயங்கி வருகின்றது.